FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348078

1. District : திருவண்ணாமலை PS: வ.உ.சி.மைதானம் Year: 2026 FIR No.: 01/PC/2026 Date: 03.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: தமிழ்நாடு தொழுநோய் தடுப்பு சட்டம் 1989 Sections பிரிவுகள்: 7 (9)

(ii) Act சட்டம்: தமிழ்நாடு தொழுநோய் நிவாரண Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: சட்டம் 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 12.05.2026 Date to : 02.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 01.06.2026 Time to : சுமார் 12.15 மணி
நேர அளவு நேரம் முதல் சுமார் 12.00 மணி நேரம் வரை

(b) Information Received at PS. Date : 03.06.2026 Time : 07.25 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : கணினியில் புகார் தெரிவிக்கப்பட்டது
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 20 கி.மீ வடமேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : கடலாடை, இலட்சணம்பள்ளி
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : C. கோபி (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் சின்னதம்பி

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 35/2026 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : கு.எண் -191, N. தாசிரப்பள்ளி Vill & Po,
தொழில் விவசாயம் முகவரி திருவண்ணாமலை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. கௌதம், சர்வேயர், திருவண்ணாமலை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

வைரம் தனித்தாள் கூலில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

03/06/2026

03/06/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

03.06.2026 at 09.45 hrs

Name: பெயர் S. ரகு
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
உ.தி.க.பரி.அ
திருவண்ணாமலை

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 03.06.2026 ம் தேதி காலை 06.15 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், N.தாசிரப்பள்ளி கிராமத்தை சேர்ந்த சின்னதம்பி மகன் C.கோபி என்பவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புதல்: C.கோபி, வயது-35, த/பெ. சின்னதம்பி, க.எண்-191, N.தாசிரப்பள்ளி Vill & Po, கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுதல்: உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி மாவட்டம், N.தாசிரப்பள்ளி கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் B.A., வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். என்னுடன் பிறந்த தம்பிகள் சதீஷ் மற்றும் மிதிலேஷ் ஆகியோர்கள் ஆவார்கள். எனது அப்பா திரு.சின்னதம்பி பெயரில் தடத்தரை கிராமத்தில் எங்களுக்கு சொந்தமாக 83 சென்ட் விவசாய நிலம் உள்ளது. அந்த நிலத்தினை எனது அப்பா சின்னதம்பி எங்கள் மூவருக்கும் பாகப்பிரிவினை செய்துவைப்பதற்காக நிலத்தினை பிரித்து கடந்த 04.03.2026 ஆம் தேதி வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் தனித் தனியாக பாகப்பிரிவினை பத்திரம் செய்துகொண்டோம். மேற்படி பாகப்பிரிவினை செய்த நிலத்தினை சப்-டிவிசன் செய்வதற்காக நில அளவை பிரிவிற்கு சார்பதிவாளர் அலுவலகம் மூலமாகவே அனுப்பிவைத்தனர். பிறகு 12.05.2026 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு வேப்பனப்பள்ளி சர்வேயர் கௌதம் என்பவர் அவரது மொபைல் எண் 8838484351 என்ற எண்ணில் இருந்து எனது மொபைல் எண் 9597828558 என்ற எண்ணிற்கு போன் செய்து உங்களது நிலத்தினை சப்-டிவிசன் செய்து பட்டா வழங்க பரிந்துரை செய்யவேண்டும் என்றும், அதற்காக நிலம் தொடர்பான ஆவணங்களை எடுத்துக்கொண்டு வேப்பனப்பள்ளி தடதாரை VAO ஆபிசுக்கு வருமாறு சொன்னார். அதனால் நானும், எங்களுக்கு பாகப்பிரிவினை செய்துவைத்த நிலத்திற்கான

ஆவணங்களை எடுத்துக்கொண்டு வேப்பனப்பள்ளி தடதாரை VAO அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு சர்வேயர் கௌதம் இருந்தார். அவரிடம் நான் என்னிடம் இருந்த ஆவணங்களை கொடுத்தேன். அந்த ஆவணங்களை பார்த்துவிட்டு சிறிதுநேரம் VAO அலுவலகத்திலேயே இருக்குமாறு ,கூறிவிட்டு VAO மற்றும் சர்வேயர் இருவரும் வெளியே சென்றுவிட்டு சுமார் 2 மணிநேரம் கழித்து மீண்டும் VAO அலுவலகத்திற்கு வந்தார்கள். பின்பு சர்வேயர் கௌதம் அவர்கள் என்னிடம் உங்களது நிலத்தின் ஆவணங்கள் சரியாக உள்ளது என்றும், உங்கள் மூன்று பேருக்கும் தனித்தனியாக நிலத்தினை அளந்து சப்-டிவிசன் செய்து புதிய பட்டாவிற்கு பரிந்துரை செய்வதற்கு ஒரு சப்-டிவிசனுக்கு ரூ.5,000/- வீதம் மூன்று சப்-டிவிசனுக்கு மொத்தம் ரூ.15,000/- கொடுத்தால் உடனே உங்கள் சப்-டிவிசன் வேலையை முடித்து தருகிறேன் என்று சொன்னார். அதற்கு நான் சர்வேயரிடம் அவ்வளவு பணம் எங்களால் தரமுடியாது என்றும், நாங்களே கூலி வேலைதான் செய்துவருகிறோம் என்று சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு 01.06.2026 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு சர்வேயர் கௌதம் அவர்களுக்கு எனது போனில் இருந்து போன் செய்து எங்களது சப்-டிவிசன் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.15,000/- கொடுத்தால் உடனே பட்டா வழங்க பரிந்துரை செய்வேன் என்றும், இல்லை என்றால் முடியாது என்றும் சொல்லிவிட்டார். பிறகு 02.06.2026 ஆம் தேதி மதியம் 12.16 மணிக்கு மீண்டும் சர்வேயர் கௌதம் அவர்களுக்கு போன் செய்து எனது நிலத்தினை சப்-டிவிசன் செய்து கொடுக்க நீங்கள் கேட்ட பணத்தை என்னால் ரெடிபன்ன முடியவில்லை என்றும் அதில் கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு சர்வேயர் கௌதம் அவர்கள் நான் கேட்ட பணத்தில் ரூ.5,000/- குறைத்துக்கொண்டு ரூ.10,000/- கண்டிப்பாக கொடுத்தால்தான் உங்களது சப்-டிவிசன் வேலை முடியும் என்றும், தான் கேட்ட பணத்துடன் தன்னை எப்போது வேண்டுமானாலும் வந்து பார்க்குமாறும் திட்டவட்டமாக சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். வேப்பனப்பள்ளி சர்வேயர் கௌதம் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/- கொடுத்து எனது பெயரிலும், எனது தம்பிகள் பெயரிலும் நிலத்தினை சப்டிவிசன் செய்து பட்டா மாற்றம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அதனால் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/-த்துடன் அவரை சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம்

கேட்ட வேப்பனப்பள்ளி சர்வேயர் கௌதம் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) Gopi.C.

Sir, a computer typed complaint received by me on 03.06.2026 at 06.25 hrs. Further a confidential verification on the general reputation of the accused Tr.Gowtham has been made and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.01/AC/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 03.06.2026 at 07.25 hrs against the accused Tr.Gowtham, Surveyor, Veppanapalli firka, Krishnagiri district. The original FIR along with this computer typed complaint was sent to the Hon'ble Court of Principal District/Session Judge, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

03/06/2026

Inspector of police

V&Ac, Krishnagiri unit.